Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 14, 2023

திங்கட்கிழமை ஓகஸ்ட் 14, 2023 | ஒளி: 09 கதிர் 061 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | Free



## 1,71,781 பேர் வரட்சியால் பாதிப்பு

நாடளாவிய ரீதியில் ஆறு மாகாணங்களில் ஏற்பட்ட வரட்சியினால் 51,641 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 781 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் 4,039 குடும்பங்களைச் சேர்ந்த 14,116 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கிழக்கில், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வரட்சியினால், 18,951 குடும்பங்களைச் சேர்ந்த 63,136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமேல் மாகாணத்தை பொருத்தவரையில் குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் 3,101 குடும்பங்களைச் சேர்ந்த 10,043 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

### பிரித்தாளும் ஜனாதிபதியிடம்

# முஸ்லிம் கட்சிகள் ஒரே குரலில் பேச வேண்டும்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

மக்களின் தேவைகளை முஸ்லிம் கட்சிகள் தனித்தனியாக பேசாமல் ஒரே குரலில் பேச வேண்டும் என்றும் ஜனாதிபதியின் அணுகுமுறையை பாரக்கிற போது அவர் பிரித்தாளுகின்ற தந்திரத்தை கையாளுகின்றார் என்றும் என்று நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பிரதி தவிசாளர் பொறியியலாளர் எம்.எம்.அப்துர் ரஹ்மான் தெரிவித்தார்.

அக்கட்சியின் காத்தான்குடியிலுள்ள தலைமையலுவலகத்தில் சனிக்கிழமை (12) நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், “ஜனாதிபதியென்ற வகையில் அவர்




பொறுப்புடன் இருக்கின்றார். அவருடைய அழைப்பை நிராகிக்க முடியாது. எந்தவொரு அரசில் கட்சியையும் அவரது அழைப்பை புறந்தள்ள முடியாது. அவரது கூட்டங்களில் கலந்து கொள்வது கருத்துச் சொல்வது கட்சிகளின் கட்சிகளின் கடமையாகும்.

அந்த வகையில் முஸ்லிம் கட்சிகள் முஸ்லிம் தரப்புக்களிடமிருந்து பெரிய ஆர்வமாக முன்னெடுப்புக்களை காணமுடியவில்லை.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களுக்கு இது தொடர்பாக ஒரு கடிதத்தை நான் அனுப்பி வைத்தேன். ஒரு முஸ்லிம் கட்சி தலைவரை நேரில் கண்டு பேசினேன்.

இதை நாம் புறக்கணிக்க முடியாது. இதை அரசியல் தீர்வுக்கு அப்பால் மக்களின் நளாந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும் பேசவேண்டும். தமிழ் தரப்பு அதை செய்கின்றார்கள். தமிழ் தரப்பு அவர்களின் காணிப்

தொடர்ச்சி P2




## நான்கும் மூலோபாயத்தின் முக்கிய தூண்கள்

உறுதியான மற்றும் நிலையான பொருளாதாரக் கொள்கை அமுலாக்கம், டிஜிட்டல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம் மற்றும் அதிக போட்டித்தன்மை கொண்ட பொருளாதாரம் ஆகியவை இலங்கையின் எதிர்கால மூலோபாயத்தின் முக்கிய தூண்கள் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இந்தியாவின் மும்பையில் உள்ள ‘இன்வெஸ்ட் ஸ்ரீலங்கா’ மன்றத்தில் உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கிளிநொச்சியில் 106 வன்புணர்வு

பு.கஜிந்தன்

கிளிநொச்சி மாவட்டத்தில்சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 106 சம்பவங்களின் மருத்துவ அறிக்கைகள் கடந்த 3 ஆண்டுகளாக கிடைக்கப்பெறாமையால், அது தொடர்பில் வழக்குத் தொடர்ந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

## 1 பில். டொலர்களை தாண்டியது வருமானம்

2023ஆம் ஆண்டில் இலங்கையின் சுற்றுலா வருமானம் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் காட்டுகின்ற அதேவேளை, ஓகஸ்ட் மாதத்தின் முதல் 10 நாட்களில் 51,594 சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளதாக

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓகஸ்ட் மாதத்திலும் 9,146 இந்திய பிரஜைகள் வருகை தந்துள்ள நிலையில், இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றனர்.



தொடர்ச்சி P2

## மதுபோத்தல்களில் ஸ்டிக்கர் கட்டாயம்

எதிர்வரும் செப்டம்பர் 15 ஆம் திகதிக்குள் அனைத்து மதுபான போத்தல்களிலும் பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுவதை கட்டாயமாக்குமாறு வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான தெரிவுக்குழுவினால் மதுவரித் திணைக்களத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

போலி மதுபான போத்தல்கள் சந்தைக்கு வருவதை தடுக்கும் தெரிவுக்குழுவின் திட்டத்துக்கு அமைய எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் அனைத்து தயாரிப்புகளிலும் பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுவதை கட்டாயமாக்க உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.




## சாணக்கியன் எம்.பி தீவிர இனவாத போக்குடையவர்

### கிழக்கின் கேடயம் அறிக்கை

நூல் ஹுதா உமர்

பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் போன்றவர்கள் தீவிரமான இனவாத போக்குள்ளவர்கள் என்பதை ஆரம்பத்திலிருந்தே நாங்கள் தெரிவித்து வந்தோம் என்று தெரிவித்த கிழக்கின் கேடயம், காணித்திருட்டில் முஸ்லிம் சமூகம் ஈடுபட்டுள்ளதாக அவர் அறிக்கை விட்டிருப்பது விழித்துக் கொண்டிருந்தவனின் கண்ணில் தூங்கியவன் குத்தியது போன்றுள்ளது என்று தெரிவித்துள்ளது



தொடர்ச்சி P2

### மட்டக்களப்பு மாவட்டத்திலும்

## கிழக்கிலும் தொழிலற்றோர் சதவீதம் அதிகரிக்கிறது

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு மாவட்டம் உட்பட முழுக் கிழக்கு மாகாணத்திலும் தொழிலற்றோர் வீதம் அதிகரித்து வருவதாக மட்டக்களப்பு மாவட்ட மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் தெரிவிக்கிறது.

மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் மாவட்ட செயலக தொழில் நிலையம் அக்ஷன் யுனிற்றி லங்கா

தொடர்ச்சி P2



## எமது மக்களுக்கு காணி உரிமை வேண்டும்



பி.கேதீஸ்

இந்நாட்டில் முழுமையான பிரஜைகளாக நாம் மாற வேண்டும் என்றால் முதலில் காணி உரிமையை நாம் பெற வேண்டும் என்றும் நாங்கள் என்ன தனி நாடா கேட்டோம்? என்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின்

தொடர்ச்சி P2

## யானை தாக்கியதில் தந்தை பலி

பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடியனாறு - புத்தம்புரி பகுதியில் காட்டு யானை தாக்கியதில் 04 பிள்ளைகளை தந்தை உயிரிழந்துள்ளார்.

புத்தம்புரி பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவரான இவர், சனிக்கிழமை இரவு (12) சுமார் 09.00 மணியளவில் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.



தொடர்ச்சி P2

## ரணில் -ராஜபக்ஷ அரசை துரத்துவோம்



### மத்தும பண்டார எம்.பி தெரிவிப்பு

எஸ் சதீஷ்

தற்பொழுது நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கும் ரணில் ராஜபக்ஷ அரசாங்கத்தை துரத்தியடித்து, சஜித் தலைமையிலான புதிய அரசாங்கத்தை எதிர்வரும் காலங்களில் உருவாக்குவோம்

தொடர்ச்சி P2

### ஐஎம்எப்பிடம் இருந்து

## அடுத்தமாதம் 350 மில். டொலர் கிடைக்கும்

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கபடப்பட நிதி வசதியின் கீழ் இலங்கைக்கு சுமார் 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்க வாய்ப்புள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் பிணையெடுப்பு தொடர்பான முதலாவது மீளாய்வை சர்வதேச நாணய நிதியம் செப்டம்பர் 11 ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரைமேற்கொள்ளும் எனவும் குறிப்பிட்டார்.




இலங்கைக்கான நீட்டிக்கப்பட்ட கடன் வசதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு கடந்த மார்ச் மாதம் அனுமதி வழங்கியதுடன், முதல் தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் வசதி கிடைக்கப் பெற்றது.

தொடர்ச்சி P2

## வாகனங்களின் இறக்குமதியை தளர்த்த தீர்மானம்

### இந்தவாரத்தில் வர்த்தமானி வெளியாகும்



பொது போக்குவரத்து சேவைக்காக பயன்படுத்தப்படும் பஸ், லொறி மற்றும் பாரவூர்திகளுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான வர்த்தமானி எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும் என்றும் ஏனைய வாகனங்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாட்டுகள், சில காலங்களுக்கு தளர்த்தப்பட மாட்டாது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் ரூபாயின் பெறுமதி வலுவடைவதற்கான சாத்தியக்கூறுகளை கருத்திற்கொண்டு, வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் கட்டம் கட்டமாக தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கூறினார்.

எவ்வாறாயினும், தற்போதைய அந்நியச் செலாவணி கையிருப்பின் அளவைக் கருத்தில் கொண்டு வாகனங்களின் இறக்குமதி மேலும் ஒத்திவைக்கப்படும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# முஸ்லிம் கட்சிகள் ஒரே குரலில் பேச வேண்டும்

பிரச்சினைகளையும் பேசுகின்றார்கள்.

ஜனாதிபதியும் வடக்கிலே எத்தனை வீதம் மக்களின் காணிப்பிரச்சினையை தீர்த்து வைத்துள்ளேன். என்பதை சொல்கின்றார். அரசியல் கைதிகளை படிப்படியாக விடுதலை செய்யும் நடவடிக்கையை தொடர்கின்றார்.

அப்படியென்றால் இது போன்ற ஒரு தீர்க்கமான தருணத்தில் முஸ்லிம்களை ஜனாதிபதியவர்கள் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன், அல்லது கண்டுகொள்ளப்படாத நிலையில் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைமைகள் தங்களை ஆக்கிக் கொண்டிருப்பது ஏன்? இது நடக்காமலும் போகலாம் ஆனாலும் இங்கு முன் வைக்கப்படும் கருத்துக்கள் எதிர் காலத்தில் நடக்கப் போகும் பேச்சுவார்த்தைகளுக்கு இது ஒரு அத்திவாரமாகவும் இருக்கும்.

இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகம் தமது எதிர்ப்பை தேவைகளை முன் வைக்கின்ற தேவை இருக்கின்றது. அந்த தேவையை பாராளுமன்றத்திலிருக்கின்ற முஸ்லிம் கட்சிகள் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

இதை முஸ்லிம் கட்சிகள் தனித்தனியாக பேசாமல் ஒரே குரலில் பேச வேண்டும். ஏனென்றால் ஜனாதிபதியின் அணுகுமுறையை பாரக்கிற போது அவர் பிரித்தாளுகின்ற தந்திரத்தோடுதான் அவர் நடந்து கொள்கிற முறையை கையாளுகின்றார்.

தமிழ் தரப்பைக் கூட ஒவ்வொரு தரப்பாகவே பேசுகின்றார். தமிழ் தரப்பு, தெற்கிலே உள்ள சிங்கள தரப்பு எனப் பார்க்கிறார். எனவே முஸ்லிம் தரப்புக்கள் ஒரு மேசையில் .இருந்து பேசி ஒரே தரப்பாக ஒரே குரலாக முன் வைக்க வேண்டும் என்பது தான் நாம் வைக்கின்ற கோரிக்கையாகும்.

தீர்வு குறித்து ஜனாதிபதி இதய சுத்தியுடன்தான் முன்னெடுக்கிறாரா என்ற கேள்வி இருக்கின்றது.

இப் போது ஜனாதிபதி திடீரென அரசியல் தீர்வை வழங்கப் போகிறேன் என்று களத்தில் இறங்கியிருப்பது சந்தேகிக்காமல் இருக்க முடியாது" என்றார்.

## 1,71,781 பேர் வரட்சியால் பாதிப்பு

வடக்கில், யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் 23,568 குடும்பங்களைச் சேர்ந்த 75,165 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஊவா மாகாணத்தில் பதுளை, மொனராகலை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் 469 குடும்பங்களைச் சேர்ந்த 1,809 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தென்மாகாணத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மட்டும் 1,513 குடும்பங்களைச் சேர்ந்த 7,512 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்பனவற்றில் இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

சட்ட மருத்துவ அதிகாரிகள் மாற்றலாகிச் சென்றமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் கடந்த 3 ஆண்டுகளாக சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 106 சம்பவங்கள் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை வழங்கப்படவில்லை. அந்த அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இதன் காரணமாக சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கை தொடர முடியாத நிலைமை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியிடம் ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோது, "எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட அனைத்து மருத்துவ அறிக்கைகளையும் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். எனவே 31 ஆம் திகதி முன்னர் அனைத்து அறிக்கைகளும் கிடைக்கப் பெறும்" என்று அவர் பதிலளித்தார்.

## சாணக்கியன் எம்.பி தீவிர...

இரா. சாணக்கியன் எம்.பி போன்றவர்கள் தீவிரமான இனவாத போக்குள்ளவர்கள் என்பதை ஆரம்பத்திலிருந்தே நாங்கள் தெரிவித்து வந்தோம் எனவும் ஆழமான உண்மைகளை ஏற்றுக்கொள்ள முடியாத பலரும் இனவாதிகளை தலையில் தூக்கிவைத்து கொண்டு கொண்டாடினார்கள் என கிழக்கின் கேடயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கின் கேடயம் சார்பில் பிரதான ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம். சபீஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தாவது,

தமிழீழ விடுதலை புலிகளின் காலத்தில் இருந்தே மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிங்கள் கடுமையான அடக்குமுறைகளை அனுபவித்து வருகின்றனர் என்பதையும் 28.76% நிலப்பரப்பில் வாழ வேண்டிய முஸ்லிம் சமூகம் வெறும் 01% நிலத்துக்குள் அடக்கப்பட்டுள்ள விடயத்தையும் அந்த காலத்தில் வெளிநாட்டில் உல்லாசமான வாழ்க்கை அனுபவித்த சாணக்கியன் போன்ற குறுகிய இனவாத சிந்தனை கொண்டோர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

முஸ்லிம் சமூகத்தின் மீதான பல்வேறு அடக்குமுறைகளை தமிழீழ புலிகளை தொடர்ந்து அரசநிர்வாகமும் திட்டமிட்டு மேற்கொண்டு வருவது நாட்டில் எல்லோரும் அறிந்த விடயமாகும். அதில் மட்டக்களப்பில் தான் உயர்ந்தளவில் அநீதிகள் நடப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.

முஸ்லிங்கள் காணிகளை கொள்ளையடிப்பதாக கூச்சலிடும் இரா.சாணக்கியன் எம்.பி போன்றவர்கள் இனவாத கண்ணாடிகளை கழற்றிவிட்டு சகோதர முஸ்லிம் சமூகத்தின் இன்னல்களை திறந்த மனதுடன் பார்க்க முன்வர வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 2,876 சதுர கிலோ மீற்றர். இதில் 27% வாழும் முஸ்லிம் சமூகத்துக்கு 786 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புத் தேவையாகயுள்ள நிலையில், இன்று காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை, அடங்களாக முஸ்லிம் சமூகம் வாழும் மொத்த நிலப்பரப்பு 1.04% வீதத்திற்கும் குறைவானதாகும்.

1999ம் ஆண்டு அரசினால் உருவாக்கப்பட்ட பனம்பலன ஆணைக்குழு வாழைச்சேனை மத்தி, கிராண் பிரதேச செயலகங்களை தற்காலிக இணைப்பாக வர்த்தமானி வெளியிடப்படாமல் இன்று வரை வைத்துள்ளது என்பதையும் இதற்கான முழுக்காரணம் புலிகளின் கெடுபிடிகளும் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகத்தின் செயற்பாடுகளும் என்பதை நாடறியும்.

13ஆவது திருத்தச்சட்டத்தை மாகாணங்களுக்கிடையில் நடைமுறைப்படுத்துகின்ற போது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை குறிப்பாக, வட, கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கக்கூடாது என்பதே பெரும்பாலான முஸ்லிம்களின் நிலைப்பாடாகும். அதற்கு இது போன்ற செயல்களே மூல காரணமாக அமைந்துள்ளது.

பனம்பலன ஆணைக்குழு வாழைசேனை மத்தியுடன் தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவை தற்காலிகமாக இணைத்ததன் காரணமாக ஓட்டமாவடி சமூகம் ஏறத்தாழ 176 சதுர கிலோ மீற்றர் நிலத்தை முழுமையாக இழந்ததையும் சாணக்கியன் போன்றோர்கள் அறிவார்களா?

கல்குடா முஸ்லிம் பிரதேசத்தில் வாழும் வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை பிரதேசங்களைச்சேர்ந்த மக்கள் வாழ்வதற்கு இடமில்லாமல் ஓட்டமாவடியிலிருந்து வாழைச்சேனை மத்திக்கு வழங்கப்பட்ட தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவிலுள்ள வெற்றுக்காணிகளில் குடியேறச் சென்றவர்களையே இரா.சாணக்கியன் எம்.பி முஸ்லிம்களின் பூர்வீகக் காணிகளை அபகரிப்பதை மறைத்து, காணித்திருட்டில் முஸ்லிம் சமூகம் ஈடுபட்டுள்ளதாக அறிக்கை விட்டிருப்பது விழித்துக்கொண்டிருந்தவனின் கண்ணில் தூங்கியன் குத்தியது போன்றுள்ளது.

இப்படியான இனவாத நடவடிக்கைகளும், இனவாத அறிக்கைகளும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1 பில். டொலர்களை தாண்டியது வருமானம்

இதேவேளை, ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6,939 பேரும், சீனாவிலிருந்து 3,707 பேரும், பிரான்சிலிருந்து 3,249 பேரும், ஜேர்மனியிலிருந்து 3,155 பேரும், ரஷ்யாவிலிருந்து 2,385 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

ஜூலை மாதத்தில் மொத்தம் 143,039 சுற்றுலாப் பயணிகள் வந்ததாகவும் அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 819,507 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கிறது.

## கிழக்கிலும் தொழிலற்றோர் சதவீதம் அதிகரிக்கிறது

ஆகியவை இணைந்து மாவட்டத்தின் மாபெரும் தொழில் கல்விச் சந்தை மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் சனிக்கிழமை (12) இடம்பெற்றது.

மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுமார் 30க்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வழங்கும் நிறுவனங்கள், அரச தனியார்துறை தொழிற் கல்வி நிறுவனங்கள் கலந்து கொண்டன.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடனடித் தொழில் வாய்ப்புக்களோடு இந்நிறுவனங்கள் இந்த தொழிற் சந்தையில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழில் கல்விச் சந்தையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மாவட்டச் செயலாளர் கலாமதி, மட்டக்களப்பு மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு 4 சதவீதமாக இருந்த தொழிலற்றோர் சதவீதம் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 7.2 ஆக அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் மொத்த தொழிலற்றோர் சதவீதம் 22 ஆக உள்ளது.

உயர்தரக் கல்வியை முடித்தவர்கள், பல்கலைக்கழகம் செல்லாத ஒரு தரப்பினர், சாதாரண தரத்தில் விடுபடுகின்ற தரப்பினர், வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் இவ்வாறு பலதரப்பட்டவர்கள் வேலையற்று இருக்கிறார்கள்.

அரசாங்க உத்தியோகங்களை விட தனியார் தொழில் துறைகளில் அதிக வேலைவாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன.

தனியார் தொழில் துறையின் மூலம்தான் உண்மையான பொருளாதார அபிவிருத்தி அடைந்து கொள்ள முடியும். எனவே, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எல்லோரும் சிந்திக்க வேண்டும்." என்றார்.

## ரணில்- ராஜபக்ஷ அரசை துரத்துவோம்

என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும்பண்டார தெரிவித்தார்.

"மலையகம் 200" நடைபவனியில் கலந்து கொண்டு தலவாக்கலையில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் உரையாற்றும்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளை ஐக்கிய மக்கள் சக்தி பெற்றது. நான் தலவாக்கலை நகருக்கு வந்து மக்களோடு உறையாடிய போது, தலவாக்கலை இதற்கு முன்பு இ.தொ.கா.வின் நகரம் ஆனால் தற்பொது பொகவந்தலாவ தொடக்கம் நுவரெலியா வரை தமிழ் முற்போக்கு கூட்டணியின் நகரமாக திகழ்கிறது என மக்கள் கூறினர்.

மக்களின் பட்டினியை இல்லாமல் செய்வதற்கும் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்குமே நாங்கள் வாக்கு கேட்கிறோம். தேயிலையின் விலை அதிகரித்துள்ளது. ஆனால் தொழிலாளர்களின் வேதனம் அறிவிக்கப்படவில்லை. அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்த போதும் தொழிலாளர்களின் வேதனம் அதிகரிக்கப்பட வில்லை.

200 வருடகாலமாக மலையக மக்கள் அனைவரும் இலங்கையர்கள். நாம் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் போல் ஒரு தேசிய கொடியின் கீழ் வாழவேண்டும். எமது அரசாங்கத்தில் மலையக மக்களுக்கான குடியுரிமையை பெற்றுக்கொடுக்க கடந்த காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நாட்டு மக்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் நல்ல உறவு முறை உள்ளது. மலையக மக்களுக்கு அதிகூடிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தவர்கள் முன்னாள் அமைச்சர்களான பழனி திகாம்பரம், மனோகனேசன், இராதாகிருஷ்ணன், வேலுகுமார் ஆகியோர் என்பதை ஞாபகபடுத்த வேண்டும்.

எங்கள் அரசாங்கத்தில் ஏழு பேர்ச்சஸ் காணியினை வழங்கி வீடமைப்பு திட்டத்தை அமைத்து கொடுத்தோம். ஆனால் 2019க்கு பின்னர், ஒரு வீட்டை கூட கட்டவில்லை நாங்கள் கட்டி வைத்த வீட்டை தற்போது உள்ள அமைச்சர்கள் சென்று திறந்து வைத்தார்கள். சஜித் பிரேமேதாசவின் அரசாங்கத்தில் மலையக மக்களுக்கு விட்டுச்சென்ற அபிவிருத்தி திட்டங்களை மீண்டும் முன்னெடுப்போம்" என்றார்.

## வாகனங்களின் இறக்குமதியை தளர்த்த தீர்மானம்

வாகன இறக்குமதியின் வேகம் அமெரிக்க டொலர் மாற்று விகிதத்தை மீண்டும் ஒருமுறை அதிகரிக்கக் கூடும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான சமீபத்திய வழிகாட்டுதல்கள் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் அடுத்த ஆண்டுக்கும் தொடரும் என்று காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நான்கும் மூலோபாயத்தின் முக்கிய தூண்கள்

இதற்குத் தேவையான சூழ்நிலைகளை வளர்ப்பதில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பும் பொதுமக்களின் உதவியும் தேசத்தின் எதிர்கால மூலோபாயத்திற்கு தொடர்ந்து இன்றியமையாதது என்று கூறினார்.

இலங்கை விரைவான பொருளாதார மீட்சியைத் தொடர்ந்து நிலையான, சமமான வளர்ச்சியைத் ஆரம்பிக்கும் நிலையில், முதலீட்டாளர்கள் இந்த வாய்ப்பிலிருந்து பயனடைவதற்கு தங்களை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## எமது மக்களுக்கு காணி உரிமை வேண்டும்

தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்ட மலையகம் 200 நடை பவனியின் போது, தலவாக்கலை நகரில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மலையகம் 200 வருட வரலாற்றில் 2015-2019 காலப்பகுதியே பொற்காலமாகும். அதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி எமது மக்களுக்காக எதுவும் நடக்கவில்லை. 2015-2019 காலப்பகுதியில் நாம் தமிழ் முற்போக்கு கூட்டணியை ஆரம்பித்து எமது மக்களுக்கு பல்வேறு உரிமைகளை பெற்றுக்கொடுத்தோம்.

அந்தவகையில் 7 பேர்ச்சஸ் காணியை பெற்றுக்கொடுத்தோம், பிரதேச செயலகங்களை அதிகரித்தோம், பிரதேச சபைகளை அதிகரித்தோம், பிரதேசசபை சட்டங்களை மாற்றினோம், அதிகார சபைகளை உருவாக்கினோம். தனி வீட்டுத் திட்டத்தை செயற்படுத்தினோம்.

ஆரம்பத்திலிருந்தே எமது உரிமைகளையும் சலுகைகளையும் நாம் போராடியே பெற்றுக்கொண்டு இருக்கின்றோம். ஜனாதிபதி அழைத்ததும் ஓடுற ஆட்கள் நாங்கள் கிடையாது. இந்த அரசிடமிருந்து ஒரு மண்ணாங்கட்டியும் கிடைக்காது என்பது எங்களுக்கு நன்றாக தெரியும்.

நாம் எமது மலையக மக்களுக்கு உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக்கொடுத்துள்ளோம். இந்த அரசாங்கத்தால் மலையக மக்களுக்கு எவ்வித வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்க முடியவில்லை. எமது மக்கள் பிச்சை கேட்கவில்லை. உரிமையைதான் கேட்கின்றனர்.

தனிநாடு கோரவில்லை. 10 பேர்ச்சஸ் காணியை தான் கோருகின்றனர். 200 வருட கால வரலாற்றில் இந்த நடைபவனியை முன்னெடுத்தமைக்கு காரணம் மலையக மக்களுக்கு குறைந்தது 10 பேர்ச்சஸ் காணி உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்பதே" என்றார்.

## அடுத்தமாதம் 350 மில். டொலர் கிடைக்கும்

இந்நிலையிலேயே, அடுத்த மாதத்தில் மேலும் 350 மில்லியன் டொலர் கிடைக்க வாய்ப்புள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட இலங்கையை மீள கட்டியெழுப்பும் நோக்கில், 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்க சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழங்கியது.

அத்துடன், சர்வதேச நாணய நிதியம் தவிர்ந்த ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து சுமார் 7 பில்லியன் அமெரிக்க டொலர் வரை கிடைக்கும் சாத்தியம் காணப்படுவதாக ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யானை தாக்கியதில் தந்தை பலி

மகிழவெட்டுவான், ஆயித்தியமலை பகுதியைச் சேர்ந்த 04 பிள்ளைகளின் தந்தையான 42 வயதுடைய இ.தேவராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்ற்கு வருகை தந்த மட்டக்களப்பு மரண திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ் நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன் - சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை குறித்த பகுதியில் காட்டு யானை தொல்லை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கும் அப்ப பகுதி மக்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் தம் பிரச்சினை தொடர்பில் பாராமுகமாகவுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

நாவலடி காணிகளிலிருந்த ஏழை மக்கள் வெளியேற்றப்பட்டமை

# “இனவாத நடவடிக்கை”

## ஹரீஸ் எம்.பி கண்டனம் தெரிவிப்பு

நூருல் ஹுதா உமர்

கிழக்கு மாகாண, மட்டக்களப்பு மாவட்டத்தில் பூர்வீக முஸ்லிம் கிராமங்களையும், குடியிருப்புக்களையும் கொண்டு வாழும் முஸ்லிங்கள் அவர்களின் விகிதாரசத்திற்கு ஏற்ப மட்டக்களப்பு மாவட்டத்தில் காணிகள் இல்லாமல் வாழ்ந்து வருவது இந்த நாட்டிலுள்ள எல்லோருக்கும் நன்றாக தெரியும். மட்டக்களப்பு வாழ் முஸ்லிங்களின் சனத்தொகைக்கும் அவர்கள் வாழும் காணிகளின் அளவுக்கும் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் இருக்கிறது. காணி விடயத்தில் பாரிய சிக்கல்களை சந்தித்து வரும் ஒரு சமூகமாகவே மட்டக்களப்பு மாவட்டம் வாழ் முஸ்லிங்கள் வாழ்கின்றனர் என நாவலடி காணி விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் நாவலடி காணி விவகாரம் தொடர்பிலான அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ள அவர்,

நாவலடியில் அத்து மீறி அடாவடித்தனமான முறையில்

**“ எமது முஸ்லிம் கட்சி தலைவர்கள் தற்போது பேசுபொருளாக மாறியுள்ள 13 ம் திருத்தம் சம்பந்தமான விடயங்களில் நாவலடியில் சாணக்கியன் போன்றோர்கள் நடந்து கொள்ளும் விடயங்களை கவனத்தில் கொண்டு முஸ்லிங்களின் இருப்புக்கு நிலையானதும், ஆதரவானதுமான தூரநோக்கு சிந்தனை கொண்ட முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும்**

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் செயற்பட்டிருப்பது கண்டித்தக்கதாகும். இவ்வளவு நாளும் பசுத்தோல் போர்த்திய புலியாக முஸ்லிங்களின் அனுதாபி போன்ற தோரணையில் செயற்பட்ட ஒருவர் பகிரங்கமாகவே முஸ்லிங்களுக்கு துரோகம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இதன்மூலம் அவரின் சாயம் வெளுத்துள்ளது. ஏழை,எளிய மக்களின் காணியுரிமையை இல்லாமல் செய்கின்ற இந்த அத்துமீறிய நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த காணி விவகாரம் தொடர்பில் அரச உயர்மட்டங்களுக்கு எடுத்துச்சென்று மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அவலநிலையை அவர்களுக்கு விளக்கி தீர்வை கோர தயாராக உள்ளத்துடன், எமது முஸ்லிம் கட்சி தலைவர்கள் தற்போது பேசுபொருளாக மாறியுள்ள 13 ம் திருத்தம் சம்பந்தமான விடயங்களில் நாவலடியில் சாணக்கியன் போன்றோர்கள் நடந்து கொள்ளும் விடயங்களை கவனத்தில் கொண்டு முஸ்லிங்களின் இருப்புக்கு நிலையானதும், ஆதரவானதுமான தூரநோக்கு சிந்தனை கொண்ட முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.



# பௌசர்–கார் விபத்தில் ஐவர் படுகாயம்

க.கிஷாந்தன்

எரிபொருள் ஏற்றிச்சென்ற பௌசரும், காரொன்றும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த ஐவர் படுகாயமடைந்துள்ளனர் என்று திம்புள்ள - பத்தன பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளங்கள் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் திம்புள்ள - பத்தனை சந்தியில் வைத்தே சனிக்கிழமை (12) இரவு 10 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வெலிமடையிலிருந்து கொட்டகலை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தேயிலை களஞ்சியசாலை வளாகத்துக்கு பயணித்துக்கொண்டிருந்த எரிபொருள் பௌசரும், நோர்வூட்டிலிருந்து தலவாக்கலை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த காருமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

கார் வேகமாக செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதன் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார் எனவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த ஐவரும் நோர்வூட் பகுதியைச் சேர்ந்த 20 -30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் திம்புள்ள - பத்தன பொலிஸார் தெரிவித்தனர்.

# சான்றிதழ் வழங்கி வைப்பு

எம் எஸ் எம் நூர்தீன்

குர்ஆன் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு புதிய காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆ பள்ளிவாயலில் (11) வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது

பள்ளி வாயலின் தலைவர் கே.எல் எம்.பரீட் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் கிழக்கு



மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தார்.

இந்த வைபவத்தில் உலமாக்கள் பிரமுகர்கள் பள்ளி வாயல் நிருவாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்

இதன் போது குர்ஆன் பரீட்சையில் சித்தியடைந்த 19 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன

# அடிகாயங்களுடன் குடும்பஸ்தர் கல்வியங்காட்டில் சடலமாக மீட்பு

எஸ் தில்லைநாதன்

கல்வியங்காடு ஜி.பி. எஸ் விளையாட்டரங்கு வீதிக்கு அருகில் உள்ள வீடொன்றில் 52 வயதான கணபதிப்பிள்ளை மகேந்திரன் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சனிக்கிழமை (12) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த குடும்பஸ்தரின் மனைவி, திருமண நிகழ்வுக்கு வெள்ளிக்கிழமை சென்றவேளை குடும்பஸ்தர் தனியாக வீட்டில் இருந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உறவினரொருவர் இவர்களது வீட்டுக்கு சென்று பார்த்தபோது குடும்பஸ்தர் உயிரிழந்த நிலையில்



காணப்பட்டதை அவதானித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை, உயிரிழந்தவரின் சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுவதாகவும், இதனால் குறித்த குடும்பஸ்தர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.





# ஊருக்குப் பெருமை தேடித் கொடுத்த மாணவர்கள்

எம்.எஸ்.எம்.ஸாகிர்

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் பிரதீபா - 2023 போட்டியானது தற்போது இடம்பெற்று வருகின்றது.

இதில் ஓர் அங்கமான மாகாண மட்டப் போட்டிகள் மட்டக்களப்பு பிள்ளையாரடி மகா வித்தியாலயத்தில் சனிக்கிழமை (12) இடம்பெற்றது.

இந்தப் போட்டிகளில் சுமார் 15 க்கு மேற்பட்ட மத்திய நிலையங்கள் பங்குபற்றியிருந்தன. அதில் முஸ்லிம் பிரிவில் சுமார் 07 மத்திய நிலையங்கள் கலந்து கொண்டன.

இந்த கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் முதல் முறையாகக் கலந்து கொண்டு சிரேஷ்ட நிகழ்ச்சியான கோலாட்டம் போட்டியிலும் மற்றும் கனிஷ்ட நிகழ்ச்சியான ரபான், கோலாட்டம் போட்டியிலும் கலந்து கொண்டது. இந்த இரண்டு பிரிவுகளில் கோலாட்டம் சிரேஷ்ட நிகழ்ச்சியில் 83 புள்ளிகளைப் பெற்று சாய்ந்தமருது வரலாற்றில் முதலாவதாகக் கலந்து கொண்ட போட்டியிலேயே முதல் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு சாய்ந்தமருதுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வரலாற்றுச் சாதனை படைந்துள்ளனர்

அதேபோல் மற்றுமொரு சாதனையாக கனிஷ்ட பிரிவு போட்டியில் ரபான் கோலாட்டம் 73 புள்ளிகளோடு இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது.

# யாழ் மாணவன் முதலிடம்



அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற UCMAS National championship 2023 போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவன் ஒருவன் முதலிடம் பெற்றுள்ளான்.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் சனிக்கிழமை (12)இடம்பெற்ற போட்டியில் சுதர்சன் அருணன் என்ற சிறுவனே அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் முதலாம் தரத்தில் கல்வி கற்று வருகின்றார்.

சாதனை புரிந்து, யாழ்ப்பாண மண்ணிற்கும் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடித்தந்த சிறுவனை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# வாகன விபத்தில் மாணவன் பலி

நிதர்ஷன் வினோத்

தென்மராட்சி சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ 9 பிரதான வீதியில் கைதடி நுணாவில் வைரவ கோவில் இடம் பெற்ற விபத்தில் பாடசாலை மாணவன் உயிரிழப்பு.



ஞாயிற்றுக்கிழமை (13) முற்பகல் 11 மணியளவில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. மாட்டு வண்டி சவாரி போட்டிக்காக வண்டில் மற்றும் மாடுகளை ஏற்றிச்சென்ற கனரக லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதிலேயே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ் விபத்தில் யாழ் இந்துக்கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் கண்டுவில் வீதி சாவகச்சேரியை சேர்ந்த 19 வயதான சிவபாலன் பிரவீன் என்ற மாணவனே உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# மரத்தில் இருந்து விழுந்து மரணம்

நவி

கம்பளை பொலிஸ் பிரிவுக்கு உற்ப்பட்ட மவுன்டெம்பல் பிரதேசத்தில் இளைஞன் ஒருவர் மரத்தில் இருந்து கீழே விழுந்து மரணம் .

அந்த பிரதேசத்தில் வசிக்கும் 27 வயதுடைய இளைஞன் ஒருவர் தூரியான் மரத்தில் ஏறி தூரியான் பறிக்க முற்பட்ட போது திடீரென மரத்தில் இருந்து கீழே விழுந்துள்ளார்.

இந்த சம்பவம் ஏற்பட்ட சந்தரப்பத்தில் உதவிக்கு சென்று இருந்த மற்ற நபர்கள் இவரை உடனடியாக கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

வீட்டின் கொங்கிறீட் தளத்தில் இருந்து விழுந்ததாகவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், மரணத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே தூரியான் மரத்திலிருந்து கீழ் விழுந்தது வெளிச்சத்துக்கு வந்தது.

**விற்பனைக்கு**

தெஹிவளை, நெதிமால கடவத்தை வீதி ( வீதிக்கு முகப்பாக) 13.5 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு.
0714991479

# புத்திஜீவிகளின் வெளியேற்றமும் தோற்றுவித்துள்ள நெருக்கடியும்

2022ஆம் ஆண்டு முதல் நாட்டில் எழுந்துள்ள நெருக்கடி நிலை காரணமாக சுமார் 300,000க்கு அதிகமான புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அதிகரித்துச் சென்ற பணவீக்கம், வரிச்சுமை, அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகள் போன்றன இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தூண்டுதல்களாக அமைந்திருந்தன.

தொற்றுப் பரவல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளாதார நெருக்கடி எழுந்துள்ள, இலங்கை மற்றும் இதர அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக, புத்திஜீவிகளின் வெளியேற்றம் என்பது பாரிய பிரச்சினைகளாக எழ ஆரம்பித்துள்ளன. குறிப்பாக சுகாதாரத் துறை தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் ஆசிரியர் சேவைத் துறை போன்ற நாட்டின் பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய துறைகளில் போதியளவு புத்திஜீவிகள் இன்மையால் நெருக்கடி நிலைகள் எழுந்துள்ளதை அண்மைக் காலங்களில் அவதானிக்க முடிந்தது. ஆசியாவின் சிறந்த சுகாதாரக் கட்டமைப்பைக் கொண்டிருந்த நாடாக ஒரு காலகட்டத்தில் கருதப்பட்ட இலங்கையில் சுகாதாரத் துறை, தற்போது பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. ஒரு வருட காலப்பகுதியினுள் நாட்டிலிருந்து 700க்கும் அதிகமான வைத்தியர்கள் வெளியேறியுள்ளனர். இதில் 125 பேர் வைத்திய ஆலோசகர்கள் என்பதுடன், தமது தொழிலில் பாண்டித்தியம் பெற்றவர்கள். 22 மில்லியன் மக்களைக் கொண்ட தேசத்தில், சுமார் 20000 வைத்தியர்கள் மற்றும் 2800 வைத்திய ஆலோசகர்கள் மாத்திரமே காணப்பட்டனர். இருந்த போதிலும், ஒரு வருடம் எனும் குறுகிய காலப்பகுதியில் பெருமளவு வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளமையானது, நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. பொது வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் பணியாற்றும் 30 வைத்தியர்களில், சுமார் 23 பேர் கடந்த இரண்டு வருடங்களில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். 29 நரம்பியல்சிகிச்சை நிபுணர்களில், குறைந்தது ஐந்து பேரேனும் தமது தொழிலிலிருந்து விலகியுள்ளனர். வெளிநாடுகளுக்கு பயிற்சிகளுக்காக சென்ற எட்டு வைத்தியர்களில் இருவர் மாத்திரமே மீளத்திரும்பியுள்ளனர். சாதாரணமாக வைத்தியர் ஒருவரை தயார்ப்படுத்துவதற்கு குறைந்தது ஏழு வருட காலம் தேவைப்படுவதுடன், வைத்திய நிபுணர் ஒருவரைத் தயார்ப்படுத்த குறைந்தது பத்து வருடங்களேனும் தேவைப்படுவதால், இவ்வாறு குறுகிய காலப்பகுதியில் பெருமளவு வைத்தியர்கள் வெளியேறுவதை நாடு தாங்கிக் கொள்வது சிரமமான காரியமாக அமையும். அத்துடன், எஞ்சியிருக்கும் வைத்தியர்களுக்கான பணிச்சுமை அதிகரித்துள்ளது. இதனால், வைத்தியசாலைகளில் ஏற்படக்கூடிய தவறுதல்களும் அதிகரிக்கலாம். தகவல் தொழில்நுட்பத்துறையிலும் இவ்வாறான சூழ்நிலை நிலவுகின்றது. நெருக்கடி ஆரம்பித்ததிலிருந்து சுமார் 10,000 தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் 20,000க்கும் அதிகமான ஆசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் நாட்டிலுள்ள புத்திஜீவிகளை நாட்டினுள் தக்க வைப்பதற்கு கவர்ச்சிகரமான சலுகைகளை அரசாங்கம் வழங்க வேண்டும். பொது வசதிகளில் தங்கியிருக்கும் நடுத்தர, வறிய மக்களை மேலும் நெருக்கடிகளுக்கு ஆளாக்கக்கூடாது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

தாங்கள் சொன்னதைத்தான் மக்கள் கேட்டு நடக்க வேண்டும் என, எந்த அரசாங்கமும் நினைக்கக்கூடாது. புத்திசாலிகள், பலசாலிகள், மேதாவிகள், ஆன்மிகவாதிகள், பல மொழி, மதம், இனம், நிறங்களைக் கொண்டது இந்த உலகம்.

இவ்வாறிருக்க, சிலரின் அரசியல் முறைமைகளை மக்கள் விரும்புவதில்லை. ஆனால், பல நாடுகள் பேதங்களை மறந்து, சகலரையும் இணைத்துக்கொண்டு, சுதந்திரமாக வாழும் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. அதனால்தான், இத்தகைய நாடுகள், மிகவும் அதிசயிக்கத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளன. தகுதியுடையவர் எவரோ, அவரை ஏற்றுக்கொள்கிறார்கள். மிகப்பெரும் வல்லரசு நாடுகளின் ஆட்சியின் தலைமைத்துவத்தில், சிறுபான்மைச் சமூகங்களுக்கும் இடமளிக்கப்படுகின்றது.

தேசம் உயர்வடைய வேண்டும் என்பதே, அரசின் குறிக்கோளாக இருக்கவேண்டும். "இது எனது தேசம்" என, இறுமாப்புடன் அனைவரும் சொல்ல வேண்டும்.

தாய் மண்ணில், அனைவரும் ஒரே பிள்ளைகள் ஆவோம். பேதம், குரோதம் சரிந்து அழிந்தாலேயே, உலகின் உயிர்ப்பை மக்கள் தரிசிக்க முடியும். கடவுள் உருவாக்கிய உலகைக் கரைக்க எண்ணலாகாது.

06. –பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இனத் தேசிய அரசியலும், "பயன்தரு கடந்த காலமும்"



என். கே.அஷோக்பரன்

அரசியலில், வரலாறு என்பது நாடுகள் மற்றும் சமூகங்களின் சித்தாந்தங்கள், அடையாளங்கள் மற்றும் அபிலாஷைகளை வடிவமைக்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக செயல்படுகிறது. பயன்தரு கடந்த காலம் என்ற கருத்து, குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதற்கு, பெரும்பாலும் இன-மத தேசியவாத அரசியலுக்காக, வரலாற்றுக் கதைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட வியாக்கியானம் மற்றும் கையாளுதலைக் குறிக்கிறது. வரலாற்றிற்கான இந்த அணுகுமுறை சமூகத்தை ஒன்றுபடுத்தவும் வல்லது, பிரிக்கவும் வல்லது. ஏனென்றால், "பயன்தரு கடந்த காலம்" ஒன்று சமகால அரசியலினால் கட்டமைக்கப்படும் போது, அது சமகால சமூகம் சமகாலப் பிரச்சினைகளை குறித்த பயன்தரு கடந்த காலக்" கண்ணாடியூடாகப் பார்க்கும் நிலையை ஏற்படுத்துகிறது. இப்பத்தியானது காலத்திற்கும் இன-மத தேசியவாத அரசியலுக்கும் இடையிலான சிக்கலான உறவை மிகச்சுருக்கமாக ஆராய விளைகிறது. வரலாற்றுக் கதைகள் எவ்வாறு இன்றைய அரசியல் மற்றும் சமூக உரையாடலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றி நாம் பேச வேண்டியதாக இருக்கிறது.

வள்ளுவன் மதமற்றவனாகவும், ராவணன் சிங்களவனாகவும் சித்தரிக்கப்படுவதென்பது இருவேறு அரசியல் "தேசியவாத" அரசியலின் ஒரே வகையாக பயன்தரு கடந்த கால" அணுகுமுறையின் வெளிப்பாடுகளே! தமிழகத்தின் "திராவிட" அரசியலுக்கு, வள்ளுவனை மதநீக்கம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. சனாதன தர்மத்தின் எந்தவொரு அடையாளமும் வள்ளுவனுக்கு இருக்கக்கூடாது, ஏனென்றால் பழந்தமிழன் சனாதன தர்மத்தின் பாற்பட்டவன் அன்று என்று நிறுவ வேண்டியது "திராவிட" தேசியவாதத்திற்கு அவசியம். அதுபோலவே ராவணனை சிங்களவனாக சித்தரிக்க வேண்டியது "சிங்கள-பௌத்த" தேசியவாதத்தின் தேவை. "சிங்கள-பௌத்தம்" அண்மைத் தசாப்பதங்கள் வரை, விஜயனின் வருகையோடுதான் "சிங்கள" வரலாற்றைத் தொடங்கியது. அது மஹாவம்சம் சொல்லும் வரலாறு. அதுவே உண்மை வரலாறா என்ற கேள்விகள் எழுப்பப்பட்ட நிலையில், அப்படியானால் விஜயனுக்கு முன் இங்கு வாழ்ந்தவர்கள் யார் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது. இதில் "சிங்கள-பௌத்த" தேசியவாதத்திற்கு சிக்கல், தமிழ் மொழியின் தொன்மையினால் ஏற்படுத்தப்படுகிறது. தமிழ் மொழியின் தொன்மை உலகளவில் ஆய்வாளர்களால் அசைக்கமுடியாதளவிற்கு உறுதிசெய்யப்பட்டுவிட்டது. தமிழ்மொழியும், அதன் தாய்மொழியான ப்ரொடோ-திராவிடியன் மொழியும் இந்திய உப கண்டத்தின் தெற்கே பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்திருக்கின்றன என்பதை மறுக்க முடியாத நிலையில் "சிங்கள-பௌத்த" தேசியவாதம் இருக்கிறது. அப்படியானால் விஜயனுக்கு முன்பு இங்கிருந்தவர்கள் சிங்களவர்கள் இல்லையென்றால், "சிங்களவர்கள்" வந்தேறு குடிகளா என்ற கேள்வி எற்பட்டுவிடுமல்லவா. அதனை சமன்செய்யத்தான் கடந்த சில தசாப்தங்களில் புராண ராவணனை "சிங்களவனாக்கும்" பயன்தரு கடந்த காலமொன்றைக்" கட்டியெழுப்பும் கைங்கரியத்தில் தீவிர "சிங்கள-பௌத்த" தேசியவாதிகள் ஈடுபட்டுவருகிறார்கள். நிற்க.

பயன்தரு கடந்த காலமானது, விரும்பிய கதை /அடையாளத்தை வலுப்படுத்தும் வரலாற்று நிகழ்வுகள், புள்ளிவிவரங்கள் மற்றும் கதைகளின் நனவான தேர்வை உள்ளடக்கியதாகும். இன-மத தேசியவாத அரசியலில், இது பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட குழுவின் மேலாதிக்கம், உயர்வு, அல்லது விதிவிலக்கான மேன்மைத் தன்மையை எடுத்துக்காட்டும் வரலாற்று தருணங்களில் கவனம் செலுத்துகிறது. இந்த அணுகுமுறை பெருமை மற்றும் ஒற்றுமை உணர்வை உருவாக்கும் அதே வேளையில், இது எங்களுக்கு எதிராக அவர்களுக்கு என்ற மனநிலையை வளர்க்கும், மற்ற குழுக்களுடன் பதட்டங்களை அதிகப்படுத்தி, உண்மையான வரலாற்றுப் பதிவை சிதைக்கும்.

இன-மத தேசியவாத அரசியலானது, பல்வேறு தோவைகளுக்காக வரலாற்றுக் கதைகளை அடிக்கடி தனக்கேற்றாற் போல பயன்படுத்திக் கொள்கிறது. பகிரப்பட்ட வரலாற்று அனுபவங்கள், கலாசார நடைமுறைகள் மற்றும் சின்னங்களை வலியுறுத்துவதன் மூலம், தலைவர்கள் ஒரு பொதுவான பதாகையின் கீழ் குறித்த அடையாளத்தைப் பகிரும் மக்கள்கூட்டத்தை ஒன்றிணைக்கும் ஒரு கூட்டு உணர்வை உருவாக்க முயல்கிறார்கள். இதனால் தம்முடைய அரசியல் சித்தாந்த அடிப்படைகளுக்குச் சாதகமான நிலையை உருவாக்க எத்தனிக்கிறார்கள். இப்படியாக அந்த மக்கள் கூட்டம் அரசியல் ரீதியில் கட்டமைக்கப்படும் போது, அது குறித்த அடையாளத்தின் மீதான விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் உருவாக்கி, குறித்த சமூகத்திற்கு ஒரு சக்திவாய்ந்த உணர்வைத் தருவதாக அமைகிறது. இதுதான் இன-மத தேசியவாதிகள் "பயன்தரு கடந்தகாலமொன்றை" கட்டமைப்பதில் அதீத பிரயத்தனம் காட்டுவதற்கான காரணம். ஏனென்றால், பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் கிடைக்காத விசுவாசத்தை, இனப்பற்று பெற்றுத்தரும். பலமான இனப்பற்று கட்டியெழுப்பப்பட, பலமான வரலாற்று வேர்கள் அவசியம். அந்தவேர்களை உருவாக்கவே இந்த அரசியல்வாதிகள் முயல்கிறார்கள். இதில் இல்லாத வேர்களை உருவாக்குவதும், வேறு மரத்தின் வேர்களைப் பிடுங்கி தம்முடையதாக்கிக் கொள்வதுமெல்லாம் அடங்கும்.

இருப்பினும், வரலாற்றை இது போன்ற குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தாம் விரும்பியவாறு கையாள்வது வெறுப்பையும் பிரிவினையையும் தூண்டலாம். இது நல்லிணக்கத்திற்கு இடையூறு விளைவிக்கும். இன-மத தேசியவாத அரசியல்வாதிகள் பெரும்பாலும் தமது இனக் குழுவிற்கு ஆதரவாக இருக்கும் கொள்கைகளை சட்டப்பூர்வமாக்குவதற்கு பயன்தரு கடந்த காலத்தை பயன்படுத்துகின்றனர். உதாரணத்திற்கு ஒரு நிலப்பரப்பை தம்முடையதாக்க வேண்டுமென்றால், இது எமது இனத்தின் மூதாதையர்கள் வந்திறங்கிய இடம், இது எமது இனத்தின் முக்கிய அடையாளம் வானிலிருந்து இறங்கிய இடம் என்று வரலாற்றுக்கற்பிதங்களை நிறுவிக்கொண்டு, அந்த நிலப்பரப்பிலிருக்கும் மற்றவர்களை விரட்டி, அந்த நிலத்தைக் கைப்பற்றிக்கொள்ள முடியும். வரலாற்று முன்னுதாரணங்களில் சமகால முடிவுகளை தொகுத்து வைப்பதன் மூலம், தலைவர்கள் தங்கள் செயல்களை வரலாற்று ஒழுங்கை மீட்டெடுக்க தேவையான நடவடிக்கைகளாக முன்வைக்க முடியும். இந்த மூலோபாயம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் விமர்சனத்தைத் திசைதிருப்புவதற்கும் குறிப்பாக பயனுள்ளதாக இருக்கும். கற்பனையில் உருவகித்த கடந்தகாலத்திற்காக, நிகழ்காலத்தில் அண்ணன், தம்பிகளாக வாழவேண்டியவர்கள் அடித்துக்கொண்டு சாகப்போகும் நிலையை இந்த அரசியல் விஷப்பரீட்சை உருவாக்கும் என்பதைப்பற்றியெல்லாம் இந்த அரசியல்வாதிகளுக்குக் கவலை கிடையாது. "பயன்தரு கடந்தகாலம்" என்பது அவர்களது அரசியலுக்கான பலமான ஆயுதமாகிறது.

இன-மத தேசியவாத அரசியல் மற்றும் "பயன்தரு கடந்த காலத்தின்" சிக்கலான தன்மையைச் சமாளிக்க, வரலாற்றுப்புலமை மற்றும் ஆழ்ந்த சிந்தனைக்கான அர்ப்பணிப்பு என்பன ஒரு மக்கட் கூட்டத்திற்கு மிக முக்கியமானது. நன்கு அறியப்பட்ட குடிமக்கள் மற்றும் விடாமுயற்சியுள்ள ஆராய்ச்சியாளர்கள் வரலாற்றுக் கதைகளை ஆராய்வதில், உண்மைகளை வெளிக்கொணர்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். திறந்த உரையாடலை ஊக்குவிப்பதன் மூலமும், பல்வேறு கண்ணோட்டங்களைக் கேட்கக்கூடிய சூழலை வளர்ப்பதன் மூலமும், சமூகங்கள் கையாளப்பட்ட வரலாற்றின் எதிர்மறையான தாக்கங்களைத் தணிக்க முடியும். ஆனால் இது இலகுவானதல்ல. ஏனென்றால், இன-மத தேசியவாதம் இதனை விரும்பாது. அது இதனை இரும்புக்கரம் கொண்டு அடக்கவே முயலும். ஏனென்றால், உண்மையான சுயாதீன வரலாறு அறியப்பட முயன்றால், அது சிலவேளைகளில், இன-மத தேசியவாதம் கட்டமைத்த "பயன்தரு கடந்தகாலத்தை" கேள்விக்குட்படுத்திவிடும், அல்லது பிழையென நிரூபித்துவிடும். ஆனால் இன்னொரு விஷயத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. "பயன்தரு கடந்தகாலம்" என்பது எப்படி இன-மத அரசியலினால், பிரிவினைக்கு பயன்படுத்தப்பட முடியுமோ, அதுபோல, தாராளவாத அரசியலினால், அது சமூக ஒற்றுமையைக் கட்டியெழுப்பவும் பயன்படுத்தப்படலாம். கத்தி மரக்கறியை வெட்டி உணவுமளிக்கும், ஆளை வெட்டிக் கொலையும் செய்யும். அதுபோலத்தான் "பயன்தரு கடந்தகாலமும்". அது ஒரு பலமான அரசியல் ஆயுதம்.

வரலாற்றுக் கதைகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்து, பயன்படுத்தக்கூடிய கடந்த காலமானது இன்றை சமூகத்தைப் பிரிக்கும் அல்லது ஒன்றிணைக்கும் திறனைக் கொண்டுள்ளது. இன-மத தேசியவாத அரசியல் தேர்ந்தெடுக்கப்பட்ட வரலாற்றைப் பயன்படுத்துவதில் குறுகிய கால ஆதாயங்களைக் கண்டாலும், நீண்ட கால விளைவுகளைத் தோற்றுவிக்கும். சமூகங்கள் தங்கள் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் வடிவமைப்பதில் வரலாற்றின் நுணுக்கமான பங்கை அங்கீகரிப்பது மற்றும் கடந்த காலத்துடன் வெளிப்படையான மற்றும் நேர்மையான ஈடுபாட்டின் மூலம் உள்ளடக்கம், புரிதல் மற்றும் நல்லிணக்கத்தை தீவிரமாக தேடுவது கட்டாயமாகும். இல்லையென்றால், ஒரு பொய்யை நம்பிக்கொண்டு அந்த சமூகம் வாழவேண்டியதுதான்.

## கடிதங்கள்

### ஆபத்தான பயணம்

முல்லைத்தீவு நகரத்திற்கான பிரதான பாதைகளில் ஒன்றாக காணப்படுகின்ற ஏ-35 தர வீதியின் வட்டுவாகல் பாலமானது எந்தவித புனரமைப்புக்களுமின்றி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு சேதமடைந்து காணப்படும் பாலமானது அடிக்கடி உடைவுகள் ஏற்படும்போது தற்காலிக புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றதே தவிர நிரந்தர திட்டங்கள் வகுக்கப்படுவதில்லை. தற்போது பாலத்தின் மையப்பகுதியில் உடைவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் பாரிய குழியும் காணப்படுகின்றது.

தற்போது ஆபத்தான நிலையில் வட்டுவாகல் பாலத்தில் பல்வேறு இடங்களில் வெடிப்புக்களும் வீதி பாதுகாப்பு அற்றதாகவும் வீதியில் சில இடங்களில் தாழிறங்கியும் காணப்படுகிறது. பலதடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்து கூறியும் எவையும் நடைபெறவில்லை.

இனி வரும் காலம் மழையுடன் கூடிய காலமாகையால் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தை மேவி செல்வதோடு, கனரக வாகனங்களும் இதன் ஊடாக செல்லும் போது மேலும் உடைவு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அப்பாலத்தினூடாக பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

சண்முகம் தவசீலன்



# தவிர்ப்போம் தடுப்போம்



தேவ அமலதாஸ்
மரிஸெ்ரலா
உளவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நாளாந்த வாழ்க்கையில் மனிதர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட வண்ணமே இருக்கின்றனர். இவ்வாறு சிக்கல் மிகுந்த வாழ்வில் பலருக்கு தற்கொலை எண்ணங்கள் தோன்றுவது பொதுவான ஒன்று என ஆய்வுகள் கூறுகின்றது. இருப்பினும் பலர் எதிர்மறை எண்ணங்களை கடந்து சென்றாலும் சிலர் அவ்விடத்தில் ஸ்தம்பித்து நின்று எதிர்மறை எண்ணங்களுக்குள் மூழ்கி தவறான முடிவுகளை எடுத்து விடுகின்றனர். இது சமூகப் பிரச்சினையாகவே உருவெடுத்து வருகின்றது. செப்டம்பர் 10-ம் திகதி உலக தற்கொலை தடுப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. தற்கொலை தொடர்பாக அறிஞர் றுத் கார்வன் என்பவர்

'வேண்டுமென்று ஒருவருடைய வாழ்வை எடுப்பது அல்லது சாவு தன்னை நெருங்கும் போது அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்பிருக்கும்போதும் தன்னை காப்பாற்றிக்கொள்ள தவறுவது தற்கொலை' என்கின்றார்.

சிக்மன் பிரைடு என்னும் உளவியலாளர்

'மனிதன் மனதில் வாழ வேண்டும் என்கின்ற ஆசையும் சாகவேண்டும் என்ற விருப்பமும் அடிப்படை உணர்ச்சிகளாக தொழில்பட்டு மனிதனை இரு திசையில் இழுத்துக்கொண்டும் ஒன்றை ஒன்று ஆதிக்கம் செய்து சண்டையிட்டுக் கொண்டும் உள்ளன .ஏதேனும் சில காரணங்களால் சாக வேண்டும் என்ற விருப்பம் வாழ வேண்டும் என்ற ஆசையை வெற்றி கொள்ளுமாயின் வாழ வேண்டும் என்ற ஆசை குறைந்து பயனற்றுப் போய்விடுகின்றது. இதன் விளைவாக இறப்பதே சிறந்த வழி என முடிவெடுப்பதே இதுவாகும்'

ஒவ்வொரு தற்கொலையாளிகளின் பின்புலத்திலும் உடலியல் உளவியல் சமூக காரணிகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ செல்வாக்கு செலுத்தி வருகின்றது. மன அழுத்தத்தினால் 90% தற்கொலை ஏற்படுவதாக கூறப்படுகின்றது. இதன் அடிப்படையில் சிறு வயதிலிருந்து ஒவ்வொரு விடயங்களையும் பார்த்து பார்த்து பிள்ளைகளுக்கு மறுக்காமல் செய்கின்ற பெற்றோர் எதிர்காலத்தில் ஏற்படுகின்ற சிறிய சிறிய பிரச்சனைகளை கூட எதிர்கொள்வதற்கான மன வலிமையையும் மன தைரியத்தையும் பழக்க மறந்து விடுகின்றனர். இதுவே நிதர்சனமான உண்மை .குறிப்பாக ஒரு மாணவன் பரீட்சை பெறுபேறு குறைவடைவதால் தற்கொலை முயற்சி மேற்கொள்கின்றான் என்றால் அவனுடன் பரீட்சை எழுதிய அவனைப் போன்ற ஏனைய மாணவர்கள் அதனை கடந்து தானே செல்கின்றனர். ஏன் இவ்வாறான விபரீத எண்ணங்கள் சிலருக்கு மட்டும் தோன்றுகின்றன. எமது சமூகத்தில் தற்கொலை என்றவுடன் கோழைத்தனம் முட்டாள்,மனபலவீனம் கொண்டவர் என பலவாறு விமர்சிக்கப்படுகின்றது. எல்லாச் சமூக சூழலிலும் வயது வேறுபாடு இன்றி சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் இந்த எதிர்மறை எண்ணங்கள் ஏற்படுவது இயல்பு. இவ்வாறு ஏற்படுகின்ற எதிர்மறை உணர்வுகளையும் பிரச்சினைகளையும் யாரோ ஒருவரிடம் பகிர முயற்சி செய்கின்றனர். அவ்வாறான வேளைகளில் பகிர்வு ஏற்றுக் கொள்ளாமல் நிராகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தற்கொலை செய்ய துணிந்து விடுகின்றனர். அத்தோடு தமது பிரச்சினைகளைப் பகிர்ந்து கொண்டு ஆறுதல் அடைய எத்தனிக்கையில் அவ்வாறு பகிர்வதற்குரிய வாய்ப்புகளும் வளங்களும் கிடைக்காத போது அந்த எண்ணங்களுக்கும் அழுத்தங்களுக்கும் ஆட்பட்டு நம்பிக்கை இன்மையால் தற்கொலைக்கு முயற்சி செய்கின்றனர் .

பொதுவாக ஒருவர் 'எனக்கு வாழவே பிடிக்கவில்லை,மனசு சரியில்லாமல் இருக்கு, மனப் பாரமாக இருக்கின்றேன்,நான் வாழ்வதை விட சாவதே மேல் ,நான் இருந்து என்ன பயன் ,இதென்ன வாழ்கை,இவ்வாறான வார்த்தைகள் உட்பொதிந்த உரையாடலை மேற்கொள்கின்றார் என்றால் அவர்கள் ஏதோ சாதாரணமாக கூறுகின்றார்கள் என கடந்து சென்று விடாதீர்கள் இது அவர்களின் மன அழுத்தம் மற்றும் மனசோர்வின் வெளிப்பாடாக இருக்கலாம். அது குறித்து மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு என்ற ஒன்று இருக்கின்றது. அவை உடனடியாக கிடைக்காவிட்டாலும் சற்று தாமதமாகவும் கிடைக்கலாம். தனிமை உணர்வு மற்றும் மனப்பாரமாக இருப்பதாக உணர்வதனை குறைத்தல் என்பது முக்கியமானதாகும். இதற்கு குடும்பம் மற்றும் சமூக ரீதியில் ஆதரவாக இருப்பது அவசியமாகும். குடும்ப உறுப்பினர்களிடையே உறவு பின்னிப்பிணைந்த ஒன்றாக காணப்படும் பட்சத்தில் தமக்கு ஏற்படுகின்ற சவால்கள் மற்றும் பிரச்சனைகள் மன அழுத்த காரணிகளை பகிர்ந்து கொள்ள கூடியதாக இருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரச்சனை குறித்து அழுத்த நிலைமைகள் குறைக்கப்படுவதோடு குடும்ப உறுப்பினர்களுடைய ஆலோசனைகள் வழிகாட்டல்களின் அடிப்படையில் தீர்வினை நோக்கி நகரக் கூடியதாக இருக்கும்.

சமூக ரீதியில் ஆதரவு வழங்குதல், அதாவது அனேகமான தற்கொலைகள் மற்றவர்கள் என்ன நினைத்து விடுவார்களோ என்ற பயத்தினாலும் இந்த சமூகத்தில் எவ்வாறு வாழப்போகின்றோம் என்ற எண்ணத்தினாலுமே இடம் பெறுகின்றன. பிறர் ஏதாவது சிக்கல் நிலைமைகளுக்கு உட்படுகின்ற போது அவர்களை விமர்சித்து தாழ்வு மனப்பான்மையினை ஏற்படுத்தி விடாது அப் பிரச்சனையிலிருந்து கைதூக்கி உதவக் கூடியவர்களாக சமூகத்தினர் காணப்பட வேண்டும். சமூகத்தில் இருக்கின்ற ஒவ்வொருவரும் ஒருவருடைய பிரச்சினைக்கு தீர்வினை கூறாவிட்டாலும் பிரச்சனை தொடர்பாக ஆறுதல் தரும் வார்த்தைகள் கூறுவது எமது கடமை ஆகும்.

தற்கொலை தொடர்பான செய்திகளையும் காட்சிகளையும் பலர் சினிமா மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவே அதிகம் பின்பற்றுவதாக காணப்படுகிறது. இவ்வாறு சமூக ஊடகங்களில் தற்கொலை தொடர்பான விடயங்கள் பேசப்படுகின்ற அல்லது வெளியிடப்படுகின்ற போது ஆர்வத்தை தூண்டாத வகையிலும் தற்கொலை மட்டுமே ஒரு தீர்வு என்ற வகையில் எண்ணாத வகையிலும் செய்திகளையும் தகவல்களையும் குறிப்பிடுவது முக்கியமாகும்.

பாடசாலை மட்டங்களில் இருந்து ஒவ்வொரு பருவ வயதினருக்கும் தற்கொலை தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவது அவசியம் ஆகும். அன்றாட வாழ்வினில் ஏற்படுகின்ற தோல்வி மனப்பான்மை, சவால்கள் ,பிரச்சினைகள்,தீர்மானம் எடுக்க இயலாத நிலைமைகள் போன்றவற்றில் எவ்வாறு எம்மால் அடுத்த கட்டத்தினை நோக்கி நகர முடியும் என்பது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலமும் தற்கொலையை குறைக்க முடியும்.

மன அழுத்த நிலைகளை கையாளுதலும் முக்கியமானதாகும். வாழ்க்கையிலே ஏற்படுகின்ற சவால்களுக்கு உடல் உள ரீதியாக முகம் கொடுக்காத ஒரு நிலையிலே மன அழுத்தம் ஏற்படுகின்றது .இவ்வாறு மன அழுத்த நிலைமைகளில் சரியாக சிந்தித்து முடிவுகளை எடுப்பதற்கு தடையாக அது அமைந்து விடுகின்றது. இவ்வாறான நிலைகளில் மன அழுத்தத்தை சரியாக கையாளக்கூடிய முறைகளை கொண்டிருத்தல் அதாவது போதிய அளவு ஓய்வு ,தியானம் ,யோகாஇ உடற்பயிற்சிகள், ஆரோக்கியமான உணவு முறைகள் சாந்தியாசனம் போதிய அளவு உறக்கம், விரும்பிய சூழலில் இருத்தல், இசையை கேட்டல் அன்பானவர்களுடன் உரையாடுதல் போன்றவை எதிர்மறை எண்ணங்களை தடுக்கும் ஒரு சில வழிமுறைகளாக இருக்கின்றது.

போதைப்பொருள் பாவனையாளர்கள் அதிகளவு தற்கொலை முயற்சிகளுக்கு ஆட்படுகின்றனர். போதைப்பொருள் பாவனையின் பின்னர் ஏற்படுகின்ற சிந்தனை குழப்பங்கள் ,நிதானமற்ற நிலையினால் இவ்வாறு தவறான முடிவுகள் எடுக்கின்றனர். இவற்றை தடுப்பதற்காக போதைப்பொருள் பாவனைகளை குறைத்தல், போதைப்பொருள் பாவிப்பதால் ஏற்படுகின்ற விளைவுகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தல் என்பன அவசியமாகும். இதன் மூலம் தற்கொலையால் மரணிப்பவர்களின் எண்ணிக்கையினை குறைக்க முடியும்.

உள ஆற்றுப்படுத்தல் சேவையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல். உள ஆற்றுப்படுத்தல் தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட அறிவே பரவலாக மக்களிடம் காணப்படுகின்றது. அது எவ்வாறான வகையில் மக்களுக்கு உதவுகின்றது அதனுடைய அளப்பெரிய சேவை மற்றும் முக்கியத்துவம் என்பவை தொடர்பாக மக்களுக்கு எடுத்துரைப்பது அவசியம் ஆகும் .பிரச்சனை நிலையில் வருபவரை அவரது உணர்வுகளுக்கு மதிப்பளித்து பகிர்வதற்கு வாய்ப்பளித்து அவரது பிரச்சினைகளையும் எதிர்மறை எண்ணங்களையும் கேட்டு சரியான தீர்வு திட்டங்களை பிரச்சினையால் முடங்கி இருப்பவரையே எடுக்க உந்துகின்ற ஒரு துறையாக இந்த உள ஆற்றுப்படுத்தல் காணப்படுகிறது. தற்கொலை எண்ணத்தில் இருப்பவர் கூட உள ஆற்றுப்படுத்தல் செயன்முறைக்கு உட்படுவதன் மூலம் அவரது எதிர்மறை எண்ணங்கள் கலைக்கப்பட்டு நேர்மறையான எண்ணங்கள் உருவாகுவதற்கு வாய்ப்பாக அமைவதோடு தவறான முடிவுகள் எடுக்காது சரியான பாதையில் பயணம் செய்ய இது உதவி புரிகின்றது. இது தொடர்பில் மக்களுக்கு பரந்த அளவிலான ஒரு அறிவை புகட்டுவது அவசியமானதாகும்.

நல்ல நட்பு வட்டாரங்களை பேணுதல் சிறந்தது. இவ்வாறான தற்கொலை தொடர்பான எண்ணங்கள் கொண்டவரை பேசுவதற்கு அனுமதிப்பதன் மூலம் அவர் அந்த எண்ணங்களிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்பினை வழங்க முடியும். பிரச்சனைகளை யாரிடமாவது கூறி அதனூடாக மன ஆறுதல்,மன நிம்மதியை பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிப்பதன் மூலம் தற்கொலை முடிவை அவர்கள் தேர்ந்தெடுக்காத வண்ணம் தடுக்க முடியும். சிறந்த நண்பர்கள் ஆலோசனை கூற கூடியவர்கள் அன்பானவர்கள் போன்றோரை சூழ வைத்திருத்தல் சிறந்த வழி முறையாகும்.

'' சிறிய கல் ஒன்றை கண்ணுக்கு அருகே வைத்துப் பார்த்தால் ஒட்டுமொத்த உலகையும் மறைக்கின்ற பெரிய பொருளாய் அது தோன்றும் அதுவே சற்று தொலைவிலே வைத்து அந்த கல்லை பார்த்தால் அது ஒரு சின்னஞ் சிறிய பொருளே. எமக்கு எழுகின்ற பிரச்சனைகளும் அவ்வாறுதான். மானிடராய் பிறந்த நாம் யாவரும் என்றோ ஓர் நாள் மரணிக்க தான் போகின்றோம். அதற்கிடையில் அற்ப விடயங்களுக்காக எம் பெறுமதி மிக்க உயிரை மாய்த்துக் கொள்வது மிகவும் தவறானது. உளநலத்தை மேம்படுத்தி வாழ்வோம்".

# மீளக்குடியமர்த்தப்பட்ட சிறுவர்களுக்காக பாடசாலை கட்டடங்கள் கையளிப்பு



ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, வட மாகாணத்தின், கிளிநொச்சி மாவட்டத்தின், கரைச்சி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த, ஸ்கந்தபுரம் கிராமத்தில் இரு பாடசாலை கட்டடங்கள் கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்றிருந்தார். இந்நிகழ்வு ஆகஸ்ட் 11 ஆம் திகதி நடைபெற்றது. மனிதநேய அபிவிருத்தி நிறுவனத்தினால் (HDO) இந்த நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஜப்பானிய அரசாங்கத்தின் Grassroots Human Security Grant Aid திட்டத்தினூடாக இந்தத் திட்டத்துக்கு நிதி வழங்கப்பட்டிருந்தது. கண்ணிவெடி அகற்றப்பட்ட ஸ்கந்தபுரம் கிராமத்தில், Grassroots Human Security திட்டத்தின் கீழ் ஜப்பானிய உதவியினூடாக இந்தப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தன.

இந்தத் திட்டத்தில், ஜப்பானிய அரசாங்கம் மொத்தமாக 88,819 அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தது. இரு பாடசாலை கட்டடங்களை நிர்மாணித்து, அதனூடாக சுமார் 250 மாணவர்களுக்கு உகந்த பயிலல் சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் நூலகம், விசேட தேவை கொண்ட மாணவர்களுக்கான வகுப்பறைகள் போன்றன உள்ளடக்கம். மேலும், வகுப்பறை மேசைகள் மற்றும் கதிரைகள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கும் இந்தத் திட்டத்தினூடாக உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

இச்சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு தரமான கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு அவசியமான மேம்படுத்தப்பட்ட பயிலல் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்தத் திட்டத்தினூடாக பங்களிப்பு வழங்கப்படும்.

இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக்கு அவசியமான உதவிகளை இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் வழங்கும்.

# இலங்கை பிள்ளைகளுடன் சச்சின் டெண்டுல்கர்




யுனிசெப்பின் தெற்காசியப் பிராந்தியத்தின் நல்லெண்ணத் தூதுவர் என்ற வகையில் சச்சின் டெண்டுல்கர் இலங்கைக்கு விஜயம் செய்தார். சப்ரகமுவ மாகாணத்தில் யுனிசெப் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு விஜயம் செய்த சச்சின், கொவிட் தொற்று நோய் மற்றும் 2022 பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களைச் சந்தித்தார்.

கிரிக்கெட் வீரராகவும், 2015ஆம் ஆண்டு யுனிசெப் அமைப்புடனும் இணைந்து, இலங்கைக்கு மேற்கொண்ட முன்னைய விடயங்களில் ஏற்பட்ட அனுபவங்களை டெண்டுல்கர் நினைவுகூர்ந்தார். சவால் மிக்க சூழலுக்கு மத்தியிலும் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எடுக்கும் முயற்சிகளையும் அவர் பாராட்டினார்.

கள விஜயத்தின் போது யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் மதிய உணவுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் முன்பள்ளிகளுக்கும் சச்சின் டெண்டுல்கர் சென்றிருந்தார். 2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் நாடு முழுவதிலும் 1,400 பாடசாலைகளில் 50,000ற்கும் அதிகமான முன்பள்ளி மாணவர்களுக்கு ஊட்டமளிக்கும் யுனிசெப் நிறுவனத்தின் மதிய உணவுத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்த உணவு வழங்கும் திட்டமானது முன்பள்ளி மாணவர்களின் வருகையை அதிகரிப்பதற்கும் உதவுகிறது.

"குழந்தைகள் தங்கள் முழுமையான திறனை அடைவதற்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு மற்றும் தரமான கல்வி என்பன அவசியமாகின்றன. அவர்களின் கல்வி மற்றும் ஊட்டச்சத்தில் முதலீடு செய்வதன் மூலம், அவர்களின் எதிர்காலத்தில் மட்டுமல்லாது ஒவ்வொரு நாட்டினது எதிர்காலத்திலும் முதலீடு செய்கின்றோம்" என சச்சின் தெரிவித்தார்.

மற்றுமொரு பாடசாலைக்கு விஜயம் செய்த டெண்டுல்கர், தரம் மூன்று மாணவர்களின் கற்பித்தல் மற்றும் கற்றல் செயற்பாடுகளைக் கண்காணித்ததுடன், இங்கு பல மாணவர்கள் பாடசாலைகளில் தங்கியிருந்து தமது கனவுகளைப் பின்பற்ற வேண்டும் என்ற விருப்பத்தைப் பகிர்ந்துகொண்டனர். அத்துடன், சிரேஷ்ட மாணவ மாணவியருடன் சச்சின் டெண்டுல்கர் கிரிகெட் விளையாட்டிலும் இணைந்துகொண்டார்.

"நான் கலந்துரையாடிய பிள்ளைகள் மிகுந்த மன உறுதியுடன் இருப்பதுடன், சிறந்த எதிர்காலத்திற்கான அவர்களின் நம்பிக்கையும் வலுவாகக் காணப்படுகிறது. அவர்கள் தமது இலக்குகளை அடைவதற்கு நாம் தொடர்ந்தும் உதவ வேண்டும்" என சச்சின் குறிப்பிட்டார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரம் குறித்து அறிந்து கொள்வதற்காக டெண்டுல்கர் தேயிலைத் தோட்டங்களுக்கும் விஜயம் செய்தார். பொருளாதார மீட்சிக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பின் ஓர் அங்கமாக, இரண்டு வயது வரையிலான பிள்ளைகள் உள்ள 110,000 குடும்பங்களுக்கு குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துள்ள உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக யுனிசெப் நிதி வழங்கி வருகிறது.

இலங்கையின் இளைஞர்கள் அடங்கிய குழுவொன்றுடன் கலந்துரையாடுவதற்கு நேரத்தை ஒதுக்கியிருந்த டெண்டுல்கர், 'கிரிக்கெட் கட்ச்-அப்' என்ற அமர்வில் வளர்ச்சி பெறுவது, தடைகளைத் தாண்டி முன்னேறுவது, தனது இலக்குகளை அடைவதில் எவ்வாறு உறுதியாக இருப்பது போன்ற விடயங்களில் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். இந்த இளைஞர்கள் யுனிசெப் அமைப்பின் ஒத்துழைப்புடன் செயற்படும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் சிறுவர் கழக வலையமைப்புடன் தன்னார்வத் தொண்டர்களாக செயற்படுகின்றனர்.

யுனிசெப் அமைப்பின் தெற்காசிய பிராந்தியத்துக்கான முதலாவது நல்லெண்ணத் தூதுவராக சச்சின் டெண்டுல்கர் 2013ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து தெற்காசியாவிலுள்ள சிறுவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு அவர் முக்கிய பங்காற்றி வருகிறார்.

திருப்பதி

# சிறுமியை அடித்து கொன்ற சிறுத்தை

திருப்பதியிலிருந்து திருமலைக்கு செல்லும் மலைப்பாதையில் தனது குடும்பத்தாருடன் நடந்து சென்றுக்கொண்டிருந்த 6 வயது சிறுமியை, சிறுத்தை திடீரென இழுத்துச் சென்று, அடித்து கொன்றுள்ளது.

ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட்டம் பாத்திரெட்டி பாளையம் கிராமத்தை சேர்ந்தவர்கள் திருப்பதிக்கு வந்துள்ளனர். பின்னர் இரவு 8 மணிக்கு லக்ஷிதா (6) தனது பெற்றோருடன் திருமலைக்கு மலைப்பாதையில் நடந்து சென்றுள்ளார்.

அப்போது, லட்சுமி நரசிம்மர் கோயில் அருகே பெற்றோருக்கு சற்று முன் நடந்து சென்றுக்கொண்டிருந்த லக்ஷிதாவை திடீரென வந்த சிறுத்தை ஒரு புதருக்குள் அடித்து இழுத்துச் சென்று கொன்றுள்ளது.





# இந்தியா-சீனா இராணுவ தளபதிகள் பேச்சு

இந்தியா-சீனா இடையே கடந்த 3 ஆண்டுகளாக எல்லை பிரச்சினை இருந்து வருகிறது. கடந்த 2020-ம் ஆண்டு கிழக்கு லடாக் பகுதியில் ஏற்பட்ட மோதலை தொடர்ந்து இரு நாடுகளும் எல்லையில் படைகளை குவித்ததால் போர் பதட்டம் ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து எல்லையில் இருந்து படைகளை வாபஸ் பெறுவது தொடர்பாக இருநாட்டு இராணுவ தரப்பிலும், தூதரக ரீதியாகவும் பல முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இதில் உடன்பாடு ஏற்பட்டு பெரும்பாலான பகுதிகளில் இருநாட்டு படைகளும் வாபஸ் பெறப்பட்டு விட்டன. இன்னும் சில பகுதிகளில் இருந்து படைகள் வெளியேற வேண்டியது உள்ளது

கடைசியாக 18-வது சுற்று பேச்சுவார்த்தை கடந்த ஏப்ரல் 23-ந் திகதி கிழக்கு லடாக்கில் சுசுல் மோல்டோ சந்திப்பில் நடந்தது. இதன் தொடர்ச்சியாக சுமார் 4 மாதங்களுக்கு பிறகு 19-வது சுற்று அமைதி பேச்சுவார்த்தை 14-ந் திகதி (திங்கட்கிழமை) நடைபெற உள்ளது.

ராஜஸ்தான்

# “என் மரணத்துக்கு இவர்கள் தான் காரணம்”

ராஜஸ்தான் மாநிலம் உதய்ப்பூரை சேர்ந்தவர் பாரத் மிஸ்ரா (45)இவர் ஒரு செய்தியாளர்.

இவரது மனைவி பெயர் கவுசல்யா கல்யாணம் ஆகி 21 வருடங்கள் ஆகிறது. ஆனால், குடும்பத்தில் எந்நேரமும் சண்டை, சச்சரவுக்கு ஆளாகியதால், கல்யாண வாழ்க்கையே வெறுத்துப்போயிருந்தார் .

இந்நிலையில், பின்சி பெரேரா என்ற பெண்ணுடன் அறிமுகமாகி அவருடன், திருமணத்தை மீறிய உறவிலும் இருந்துள்ளார். வீட்டுக்கு தெரிந்த நிலையில் . கவுசல்யா வழக்கம்போல் சண்டை போட்டுள்ளார். எனினும், பெரேராவுடன் தொடர்ந்து உறவில் இருந்து வந்தார். இதனால், தகராறும், பிரச்சனையும் குடும்பத்தில் அதிகரித்திருந்த நிலையில், பாரத் மிஸ்ரா கடுமையான மன உளைச்சலுக்கு ஆளானார். இதற்கு நடுவில், மிஸ்ராவிடம், பெரேராவும் தகராறு செய்ய ஆரம்பித்துள்ளார். 2 பெண்களும் தினமும், ஆளுக்கு ஒரு பக்கம், சண்டை போடவும், உச்சக்கட்ட வெறுப்புக்கு ஆளானா மிஸ்ரா. துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்த தற்கொலைக்கு முன்பு, பேஸ்புக்கில் , “என் மரணத்திற்கு காரணம், மனைவி கவுசல்யாவும், காதலி பின்சி பெரேராவும்தான். எடுக்க வைத்துவிட்டது.” என பதிவிட்டுள்ளார்.




பிரான்ஸ்

# ஈபிள் டவர்க்கு வெடிகுண்டு மிரட்டல்

வெடிகுண்டு மிரட்டலைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தலைநகர் பாரிஸில் உள்ள ஈபிள் டவர் சனிக்கிழமை (12) பொதுமக்கள் வெளியேற்றப்பட்டு மூடப்பட்டது.

வெடிகுண்டு மிரட்டல் ஒரு தவறான செய்தி என்று உறுதிப்படுத்திய பின்னர் இரண்டு மணி நேரம் கழித்து பொதுமக்கள் மீண்டும் உள்ளே அனுமதிக்கப்பட்டனர் என்று ராய்ட்டர்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா

# கின்னஸ் சாதனை படைத்த ‘தாடி’ பெண்



அமெரிக்காவின் மிச்சிகனைச் சேர்ந்த பெண்மணி எரின் ஹனிகட் (38). இவருக்கு, (பிசிஓஎஸ்) என்ற பிரச்சனை உள்ளது. இதனால், ஹார்மோன் சமநிலையின்மையை ஏற்படுத்தும் மற்றும் ஒழுங்கற்ற மாதவிடாய், எடை அதிகரிப்பு, கருவுறாமை முடி வளர்ச்சியை ஏற்படுத்தும்.

அவளுக்கு 13 வயதாக இருந்தபோது வளர ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில், அப்பெண் தன் பார்வையை ஓரளவு இழந்த பிறகு, ஷேவிங் செய்வதில் சோர்வடைந்தாள். கொவிட்-19 தொற்றுடன் தனது தாடியை வளர்க்க முடிவு செய்தார்.

இந்த நிலையில், தற்போது எரினின் தாடி 30 செமீ (11.81 அங்குலம்) அளவைக் கொண்டுள்ளது. இதனையடுத்து, இவர் உலகில் மிக நீளமான தாடியை கொண்ட பெண்மணி என்ற கின்னஸ் சாதனையை படைத்துள்ளார். முந்தைய சாதனை 25.5 செமீ (10.04 அங்குலம்) நீளமான தாடி 75 வயதான விவியன் வீலருக்கு இருந்துள்ளது. இந்த சாதனையை தற்போது எரின் முறியடித்துள்ளார்.

ரஷ்யா

# அரசு அதிகாரிகளுக்கு ஆப்பிள் ஐபோன் தடை

உக்ரேன் மீது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ரஷ்யா தனது படைகளை அனுப்பி தாக்குதலை தொடங்கியது. உக்ரேன் மீதான ஆக்கிரமிப்பை அடுத்து கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஆப்பிள் நிறுவனம் ரஷ்யாவிலிருந்து வெளியேறியதுடன் விற்பனையையும் நிறுத்தியது. இருப்பினும் வேறு நாடுகளிலிருந்து ரஷ்யாவிற்கு ஆப்பிள் ஐபோன் மற்றும் ஐபேடு சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன.

இதனிடையே ரஷ்ய மக்களால் பயன்படுத்தப்படும் ஆப்பிள் நிறுவன சாதனங்கள் மூலம் நாட்டிற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளதாக ரஷ்யாவின் முக்கிய உள்நாட்டு பாதுகாப்பு சேவை அமைப்பான எஃப்.எஸ். பி. குற்றம் சாட்டியிருந்தது. இதில் ஆப்பிள் நிறுவனமும், அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகமையும் இணைந்து செயல்படுவதாக எஃப்.எஸ்.பி. தெரிவித்தது.



பணி பயன்பாடுகளுக்கான செயலிகளை உபயோகப்படுத்தவும், வேலை சம்பந்தமான மின்னஞ்சல் பரிமாற்றத்தை செய்யவும், ஆப்பிள் நிறுவன ஸ்மார்ட்போன்கள் மற்றும் டேப்லெட்டுகளை பயன்படுத்த கூடாது. தனிப்பட்ட தேவைகளுக்காக ஐபோன்களைப் பயன்படுத்தலாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த குற்றச்சாட்டுகளை ஆப்பிள் நிறுவனம் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



எல்.பி.எல்:

# தகுதிகாண் போட்டிகளில் ஓறா

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான லங்கா பிறீமியர் லீக் தொடரின் தகுதிகாண் போட்டிகளுக்கு தம்புள்ள ஓறா தகுதி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொழும்பு ஸ்ரைக்கர்ஸுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே தகுதிகாண் போட்டிகளுக்குத் தகுதி பெறுவதை ஓறா உறுதிப்படுத்தியுள்ளது.

இப்போட்டி முடிவில் ஓறாவுக்கு இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையில் 10 புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையில், புள்ளிகள் பட்டியலிலுள்ள ஸ்ரைக்கர்ஸ் மீதமுள்ள தமது இரண்டு போட்டிகளை வென்றாலும் எட்டுப் புள்ளிகளையே அடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஓறா ஆரம்பத்தில் நசீம் ஷா, சாமிக கருணாரத்ன, மதீஷ பத்திரண, ஜெஃப்ரி வன்டர்சேயிடம் அவிஷ்க பெர்ணாண்டோ, அணித்தலைவர் குசல் மென்டிஸ், சதீர சமரவிக்கிரம, தனஞ்சய டி சில்வாவை இழந்தபோதும் பென் மக்டர்மூட்டின் ஆட்டமிழக்காத 69 (46), அலெக்ஸ் றோஸின் 52 (38) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. வன்டர்சே 4-0-21-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 167 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்ரைக்கர்ஸ், 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களையே பெற்று 50 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், ஹஸன் அலி 4-0-16-3, நூர் அஹ்மட் 4-0-14-2, துஷான் ஹேமந்த 4-0-16-2, பினுர பெர்ணாண்டோ 3.4-0-18-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக மக்டர்மூட் தெரிவானார்.

இதேவேளை முன்னதாக நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸுடனான போட்டியில் பி-லவ் கண்டி வென்றது.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கண்டியை ஓறா எதிர்கொள்ளவுள்ளது.



நான்காவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# மேற்கிந்தியத் தீவுகளை தோற்கடித்த இந்தியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், புளோரிடாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நான்காவது போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

மே. தீவுகள்: 178/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷிம்ரோன் ஹெட்மயர் 61 (39), ஷே ஹோப் 45 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: குல்டீப் யாதவ் 2/26 [4])

இந்தியா: 179/1 (17 ஓவ. ) (துடுப்பாட்டம்: யஷஸ்வி ஜைஸ்வால் ஆ.இ 84 (51), ஷுப்மன் கில் 77 (47) ஓட்டங்கள்) போட்டியின் நாயகன்: யஷஸ்வி ஜைஸ்வால்



20 வயதுக்கு உட்பட்டோருக்கான பூப்பந்தாட்டத்தில்

# காரைதீவு விபுலானந்தா தேசிய மட்டத்துக்குத் தெரிவு

வி.ரி. சகாதேவராஜா

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நடாத்தி வரும் பெருவிளையாட்டுகளுக்கான போட்டியில் பூப்பந்தாட்ட போட்டியில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

திருகோணமலையில் அண்மையில் நடந்த கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் பூப்பந்தாட்ட போட்டியில் காரைதீவு கமு/ விபுலானந்தா மத்திய கல்லூரி அணி 20 வயதிற்குட்பட்ட போட்டியில் இரண்டாமிடம் பெற்றுகொண்டது.

இறுதிப் போட்டியில் திருகோணமலை கோணேஸ்வரா இந்து கல்லூரி அணியிடம் தோல்வியுற்று இரண்டாமிடம் பெற்றுகொண்டனர்.

ஈஸ்டர்ன் இ-10 பிளாஸ்ட் தொடர்:

# முடிசூடிய சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ்

அஸ்ஹர் இப்றாஹீம்

கல்குடா டோன்ட் டச் ளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஈஸ்டர்ன் இ-10 பிளாஸ்ட் கடினபந்து கிரிக்கெட் தொடரில் சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாக முடிசூடியது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திருகோணமலை, மட்டக்களப்பு ,அம்பாறை மாவட்ட அணிகளுடன் பொலனறுவ மாவட்டத்தைச் சேர்ந்த அணிகளுமாக மொத்தம் 32 அணிகள் பங்கேற்ற இத்தொடரில், ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தை வென்றே பிளையிங் ஹோர்ஸ் சம்பியனானது.




இப்போட்டியில் முதலில் துடுப்பாடிய சம்மாந்துறை 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 113 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிளையிங் ஹோர்ஸ் 9 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இறுதிப் போட்டியின் நாயகனாக முஹம்மட் றிபானும், தொடரின் நாயகன் மற்றும் சிறந்த பந்துவீச்சாளராக எஸ்.எம். சுஜான் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 14 ஓகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.